**செ. கு. எண்**: 248 **நாள்**:10.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **10.7.2012**

சென்னை மாநகர காவல் ஆணையரகத்தில் உள்ள கானாத்தூர் காவல் நிலையத்தில் **9.7.2012** அன்று திருட்டு வழக்கு ஒன்றில் திரு. ஹுமாயூன் என்பவரை அழைத்து விசாரிக்கும் போது திரு. ஹுமாயூன் காவல் நிலையத்தை விட்டு வெளியே ஓடி மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

இச் சம்பவத்தின் உண்மை நிலையை அறிய தாம்பரம் குற்றவியல் நீதிபதி விசாரணை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இச்சம்பவத்திற்காக சம்பந்தப்பட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த திரு. ஹுமாயூன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திரு. ஹுமாயூன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இது போன்ற சம்பவங்கள் வருங்காலங்களில் நிகழா வண்ணம் தக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**